سُوْرَةُ الْفَلَقِ مَكِّيَّةٌ وَّهِيَ خَمْسُ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

قُلْ اَعُوْذُ بِرَبِّ الْفَلَقِ ۙ﴿١﴾ مِنْ شَرِّ مَا خَلَقَ ۙ﴿٢﴾ وَمِنْ شَرِّ غَاسِقٍ اِذَا
وَقَبَ ۙ﴿٣﴾ وَمِنْ شَرِّ النَّفّٰثٰتِ فِی الْعُقَدِ ۙ﴿٤﴾ وَمِنْ شَرِّ حَاسِدٍ اِذَا حَسَدَ ﴿٥﴾ ع ١ ٣٨

سُوْرَةُ النَّاسِ مَكِّيَّةٌ وَّهِيَ سِتُّ اٰيَاتٍ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

قُلْ اَعُوْذُ بِرَبِّ النَّاسِ ۙ﴿١﴾ مَلِكِ النَّاسِ ۙ﴿٢﴾ اِلٰهِ النَّاسِ ۙ﴿٣﴾
مِنْ شَرِّ الْوَسْوَاسِ ۙ الْخَنَّاسِ ۙ﴿٤﴾ الَّذِیْ یُوَسْوِسُ فِیْ
صُدُوْرِ النَّاسِ ۙ﴿٥﴾ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ﴿٦﴾ ع ١ ٣٩

அத்தியாயம் : 113

## அல்ஃபலக் _ வைகறை

வசனங்கள் : 5 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (நபியே!) நீர் கூறுவீராக: வைகறையின் இரட்சகனிடம் நான் பாதுகாவல் தேடுகிறேன்.
2. அவன் படைத்தவற்றின் தீங்கைவிட்டும்;
3. (இரவினுடைய) இருளின் தீங்கைவிட்டும்_ அது பரவிவிடும்போது _
4. மேலும், முடிச்சுகளில் (மந்திரித்து) ஊதும் பெண்களின் தீங்கைவிட்டும்_
5. பொறாமைக்காரனின் தீங்கைவிட்டும்_ அவன் பொறாமைகொள்ளும்போது (நான் காவல் தேடுகிறேன்).

அத்தியாயம் : 114

## அந்நாஸ் _ மனிதர்கள்

வசனங்கள் : 6 மக்கீ ருகூஃ : 1

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன்
அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1. (நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களின் இரட்சகனிடம் நான் (பாது)காவல் தேடுகிறேன்.
2. (அவன்தான்) மனிதர்களின் அரசன்.
3. (அவனே) மனிதர்களின் (வணக்கத்திற்குரிய) நாயன்.
4. பின்னால் பதுங்கியிருந்து வீண் சந்தேகங்களைக் கிளப்பக்கூடியவ(னான ஷைத்தா)னின் தீங்கைவிட்டும் (நான் பாதுகாவல் தேடுகிறேன்).
5. அவன் எத்தகையவனென்றால், மனிதர்களின் இதயங்களில் வீண் சந்தேகங்களைக் கிளப்பிவிடுகிறான்.
6. (இத்தகையோர்) ஜின்களில் மற்றும் மனிதர்களில் இருக்கின்றனர்.